1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை நான் உணர்கிறேன். இந்த பண்டகசாலை, ஊழியர் குடியிருப்பு இவை இரண்டும் விரிவாக்குவதற்கு எவ்வளவு தேவைப்படும் என்பதை நான் விரைவில் அதிகாரிகளோடு கலந்து பேசி மீதி இருக்கிற இடத்தைத் தருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : தலைவர் அவர்களே, நன்றி.

சுவாமி ஸ்ரீசகஜானந்தா நூற்றாண்டு விழா.

குறுகியகால வினா—*7967—திரு. இளம்வழுதி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நந்தனார் கல்விக் கழகங்களின் ஸ்தாபகரும், இறுதி வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்டு மறைந்தவருமான சுவாமி ஸ்ரீசகஜானந்தா அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு தரப்பில் நடத்துகின்ற ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே முதலமைச்சராக இருந்தபோது மறைந்த பெரியவர் பாபு ஜகஜீவன்ராம் அவர்களை அழைத்து வந்து சுவாமி சகஜானந்தா அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தார்கள். அதை நன்றியோடு நினைவுகூர்கின்ற நான் மற்றத் தலைவர்களுக்கு விழா எடுப்பதைப் போல இந்தத் தலைவருக்கும் அரசின் தரப்பில் விழா எடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விடையை எதிர்பார்க்கவில்லை.